கூடலூர் நகராட்சி(நீலகிரி)

31.12.2021 ம் தேதி வெள்ளி கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின்

நகர்மன்ற சாதாரன கூட்டத்தின் பொருட்கள்

தலைமை– திரு.சு.ராஜேஸ்வரன்

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்

1) இந்நகராட்சியின் நகர்மன்ற தீர்மான எண் 187 நாள் 30.09.2021 ஒப்பந்த அடிப்படையில் பொது பிரிவு, பொறியியல் பிரிவு(ம) பொது சுகாதார பிரிவு ஆகிய பிரிவுகளில் பணிபுரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 2019–2020 ம் ஆண்டு விலை விகித நிர்ணய பட்டியலின்படி திரு.உசைன் ஒப்பந்ததாரரின் மூலமாக புள்ளி விபர குறிப்பாளர் (2), பிரிவு எழுத்தர் (4), தொழில் நுட்ப உதவியாளர் (1), உதவியாளர், தட்டச்சர் –3 பணியாளர்களுக்கு 01.10.2021 முதல் 31.02.2021 வரை மூன்று மாத காலங்களுக்கு அனுமதி பெறப்பட்டிருந்தது. இந்நிலையில் அனுமதி காலம் 31.12.2021 ல் முடிவடைவதால் அலுவலகப்பணிகள் ஒய்வின்றி நடைபெற ஏதுவாக மேலும் 1 மாதம் 01.01.2022 முதல் 31.01.2022 வரை பணி நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு –1) அனுமதி வழங்கலாம்.

2) புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான கால அவகாசம் இல்லாத காரணத்தால் 1 வருட காலத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்தபுள்ளி அடிப்படையில் பணி நீட்டிப்பு வழங்கலாம்.

2) இந்நகராட்சிக்குட்பட்ட ஆய்வு மாளிகையில் உள்ள முன்புற கதவில் உள்ள Lock உடைந்திருந்ததை மாற்றி உள்ளதாகவும் மற்றும் தொலைக் காட்சி கட்டணம் 29.04.2021 முதல் 29.08.2021 வரை செலுத்தியுள்ளதாகவும் அதற்கான மொத்த தொகை ரூ.15000/– வழங்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு –ரூ.15000/– ஐ வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

3) இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் குடிநீர் குழாய் உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.ட.முத்துகுமார் என்பவர் தனது கல்வி தகுதிகேற்று மின் உதவியாளர் பணியிடம் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். உள்ளூர் வழக்கறிஞரான திரு.ஜெபின் வழக்கறிஞர் வழக்கு எண் W.P.No.16405/2020 க்கான வழக்கிற்கான பத்தி வாரியான அறிக்கை தயார் செய்து அளித்துள்ளார். எனவே பத்திவாரியான அறிக்கை தயார் செய்ததற்கான கட்டணம் ரூ.5000/– ஐ வழங்க கேட்டுள்ளார். எனவே அத்தொகையை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர பத்திவாரியான அறிக்கை தயார் செய்த செலவினம் ரூ.5000/– வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

4) இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் பொதுப்பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்து வரும் திரு.S.பிரபாகரன் அவர்களை குன்னூர் நகராட்சிக்கு மாறுதல் செய்யப்பட்டதும் திருமதி.எம்.ரவிகலா என்பவரை கூடலூர் நகராட்சிக்கு பணி மாறுதல் செய்து உத்திரவு பிறப்பிக்கப்பட்டதை தன்னை பணியில் சேர விடாமல் இருப்பதை தொடர்ந்து தன்னை பணியில் சேர அனுமதிக்குமாறு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.No.25504/2018 மூலமாக வழக்கு தொடர்ந்துள்ளதை சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞருக்கு பத்திவாரியான அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டமைக்கு வழக்கு கட்டணமாக ரூ.5000/– ஐ வழங்க கேட்டுள்ளார். மேற்படி கட்டண தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – சென்னை உயர்நீதி மன்றத்தின் வழக்கினை தொடர பத்திவாரியான அறிக்கை தயார் செய்த செலவின தொகை திரு.ஜெபின் வழக்கறிஞருக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

5) தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம் கோமுத்தூர் நிறுவனத்திற்கு 2021–22 ஆண்டு பங்களிப்பு தொகை ரூ.30000/– னை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனத்திற்கு ரூ.30000/– ஐ வழங்கலாம்.

6) இவ்வலுகத்திற்கு தேவையான படிவங்கள் மற்றும் எழுது பொருட்கள் விநியோகம் பெற 20.12.2021 அன்று விலைப்புள்ளி அறிவிப்பு செய்ததில் வரப்பெற்ற 3 விலை புள்ளிகளின் விவரங்களை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்களின் விபரம் | கோவை ஆதி தொழு நோயாளிகளின் வாழ்வு நலச்சங்கம் கோவை | முரளி ஆப்செட் கோமையம்பாளையம், கோவை | அம்மன் பிரிண்டிங், பன்னீர் மடை, கோவை |
|---|---|---|---|---|
| 1 | Property Tax Receipt | 4.50 | 4.90 | 5.20 |
| 2 | Payment Book | 1450 | 1500 | 1575 |
| 3 | Brown Tap (big) | 120 | 140 | 149 |
| 4 | White Tap (Small) | 87 | 98 | 106 |
| 5 | White Tap (Big) | 130 | 150 | 158 |
| 6 | Gum Bottle (Big) | 160 | 180 | 191 |
| 7 | Birth Form | 1480 | 1550 | 1575 |
| 8 | Death Form | 1480 | 1500 | 1575 |
| 9 | Form IV A | 685 | 750 | 790 |
| 10 | A4 Size Paper | 380 | 410 | 430 |
| 11 | Legal Size Paper | 460 | 480 | 485 |
| 12 | Attendence Register | 680 | 710 | 735 |
| 13 | Pencil | 68 | 88 | 96 |
| 14 | 3 Quire Note | 240 | 260 | 275 |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | 4 Quire Note | 350 | 375 | 416 |
| 16 | Marker Pen (Green,Red, Black) | 55 | 72 | 96 |
| 17 | Highlighter Pen | 60 | 76 | 85 |
| 18 | Fevistick (Big) | 110 | 130 | 142 |
| 19 | Colour குண்டூசி | 120 | 140 | 156 |
| 20 | Tag | 110 | 140 | 152 |
| 21 | File pad | 60 | 68 | 78 |
| 22 | Wrapper Sheet | 14 | 16 | 19 |
| 23 | நினைவூட்டும் நாட்குறிப்பு பதிவேடு | 690 | 710 | 740 |
| 24 | தற்செயல் விடுப்பு பதிவேடு | 650 | 690 | 710 |
| 25 | Stapler Machine (Big) | 480 | 490 | 505 |
| 26 | Printer Ribbon | 1480 | 1510 | 1550 |
| 27 | ஊதிய பதிவேடு | 2335 | 2700 | 2775 |

மேற்கண்ட இனங்களுக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள கோவை ஆதி தொழுநோயாளிகள் மறுவாழ்வு நல சங்கம் கோவை அவர்களின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள கோவை ஆதி தொழு நோயாளிகள் மறுவாழ்வு நலச்சங்கம் கோவை அவர்களுக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

7) இந்நகராட்சிக்கு சொந்தமான பகுதிகளில் சேகரிக்கப்படும் திடக்கழிவுகளை கொட்டுவதற்கு திரு. பீட்டர் அவர்களுக்கு சொந்தமான நில அளவை எண்195/2எ ல் கடந்த ஜனவரி 2021 முதல் டிசம்பர் 2021 வரை மாத வாடகை ரூ.20000/– அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒப்பந்த காலம் டிசம்பர் 2021 உடன் முடிவடைந்ததால் மேலும் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த காலத்தை நீட்டிப்பு செய்வதற்கும் அதற்கான தொகை ரூ.2.40 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு –அனுமதி வழங்கலாம்.

8) 27.12.2021 தேதிய மாவட்ட ஆட்சியரின் ஆய்வு கூட்டத்தில் 28.12.2021 அன்று இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சட்டமன்ற பொது கணக்கு குழு ஆய்வு செய்ய இருப்பதாகவும் அது சமயம் பொது கணக்கு குழு உறுப்பினர்கள், அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கு காலை தேநீர், சிற்றுண்டி மற்றும் மதிய உணவு ஏற்பாடு செய்ய அறிவுறுத்தப்பட்டது. அதற்கான உத்தேச செலவினம் ரூ.75000 – ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1) அனுமதி வழங்கலாம்.

2) சட்ட மன்ற பொது கணக்கு குழு ஆய்வு அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோராமல் பணியினை மேற்கொண்டதை ஏற்கலாம்.

9) இந்நகராட்சி நுண்ணுயிர் உரக்கூடத்திற்கு ஈக்களை கட்டுப்படுத்துவதற்கான 5 இயந்திரங்கள் நிறுவுவதற்கான உத்தேச செலவினம் ரூ.15000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –அனுமதி வழங்கலாம்.**

10) இந்நகராட்சி நுண்ணுயிர் உரக்கூடத்திற்கு ஈக்களை கட்டுப்படுத்துவதற்கான 5 இயந்திரங்கள் வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.15000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –அனுமதி வழங்கலாம்.**

11) இந்நகர்மன்ற தீர்மானம் எண்.189 நாள் 30.09.2019ன் படி பொதுசுகாாாரப் பிரிவில் திருவாளர்கள். அட்சயா அசோசியேட்ஸ் நிறுவனம் மூலம் 80 தூய்மை பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். ஒப்பந்த காலம் 31.10.2020 உடன் முடிவடைந்ததால் 01.11.2020 முதல் 31.01.2021 வரை, 01.02.2021 முதல் 28.02.2021 வரை, 01.03.2021 முதல் 30.06.2021 வரை, 01.07.2021 முதல் 31.07.2021 வரை, 01.08.2021 முதல் 31.08.2021, 01.09.2021 முதல் 30.09.2021, 01.10.2021 முதல் 31.10.2021 , 01.11.2021 முதல் 30.11.2021 மற்றும் 01.12.2021 முதல் 31.12.2021 ஆகிய காலங்களில் பணி நீட்டிப்பு வழங்கப்பட்டது. புதிய ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண்.2467/2020/எச்1 நாள் 25.09.2020 வாயிலாக கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் அனுமதி கிடைக்கப்பெறாத நிலையில் பொதுசுகாதார பணிகள் பாதிக்காத வண்ணம் பணியினை மேற்கொள்ள திருவாளர்கள். அட்சயா அசோசியேட்ஸ், நிறுவனத்திற்கு மேலும் ஒரு மாத காலத்திற்கு 01.01.2022 முதல் 31.01.2022 வரை பணி நீட்டிப்பு செய்யவும் அதற்கான தோராய செலவினம். ரூ.17.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –அனுமதி வழங்கலாம்.**

12) **கூடலூர் நகராட்சிக்கு** Urban Health and Wellness Centre (UHWCS) கட்டும் பணிக்காக நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை Roc.No.32454/2021/Amrut-2 நாள்.17.12.2021 அன்று ரூ.25.00 இலட்சம் நிர்வாக அனுமதி வரப்பெற்றது ஆனால் கட்டிட கட்டுமான பொருட்கள் மேட்டுப்பாளையம் பகுதியில் இருந்து வர உள்ளதால் (150 km மலைப்பாதை) கட்டிடம் கட்டுவதற்கு கூடுதலாக ரூ.5.00 இலட்சம் தேவைப்படுகிறது. மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.30.00 இலட்சம் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு–அனுமதி வழங்கலாம்.**

வாடியம

13) இந்நகராட்சியில் 23.11.2021 அன்று நடைபெறவிருந்த ஒப்பந்தப்புள்ளி இரத்து செய்ய திரு.நசுருதின் என்பவர் தொடரப்பட்ட வழக்கிற்கு பத்தி வாரியான அறிக்கை தயார் செய்து அலுவலகத்திற்கு அளித்துள்ளதாலும் மற்றும் வழக்கு வழக்காட தொகை ரூ.15000–ஐத்தை திரு.திப்புசுல்தான் அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு–அனுமதி வழங்கலாம்.

14) கூடலூர் நகராட்சிக்கு 15வது மத்திய நிதி குழு மானியம் – Tied மற்றும் Un Tied Grant 2021–2022 ம் ஆண்டுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் ந.க.எண்.31117/2021/அம்ருத்–2 நாள்.05.01.2022 அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. கீழ் கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**Tied Grant (Water Supply) 2021-2022**

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | இரும்பு பாலம் சேகரிப்பு கிணறுக்கு 40 HP No.1 டர்பைன் மோட்டார் சப்ளை செய்து பொருத்தும் பணி. | 10.00 |
| 2. | இரும்பு பாலம் சேகரிப்பு கிணறுக்கு பொருத்தப்பட்டுள்ள 40 HP டர்பைன் மோட்டார்களுக்கு பேனல் போர்டு மற்றும் எலக்ட்ரிக்கல் பணி மேற்கொள்ளுதல். | 5.00 |
| 3. | இரும்பு பாலம் பில்டர் பெட் பகுதிக்கு பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி. | 9.00 |
| 4. | இரும்பு பாலம் பில்டர் பெட் பகுதிக்கு சுற்றுசுவர் மற்றும் கேட் அமைக்கும் பணி. | 7.00 |
| 5. | இளங்கோ நகர், நந்தட்டி மற்றும் கல்குவாரி பகுதிகளுக்கு குடிநீர் குழாய் விரிவு படுத்தும் பணி. | 9.00 |

| | | |
|---|---|---|
| 6. | அத்திபாளி பகுதிக்கு குடிநீர் தேக்க தொட்டி அமைத்து குடிநீர் குழாய் அமைக்கும் பணி. | 9.00 |
| 7. | இரும்பு பாலம் பகுதியில் உள்ள குடிநீர் வடிகட்டி (Filter Bed) பழுது பார்க்கும் பணி. | 10.00 |
| | மொத்தம் | 59.00 |
| | **Tied Grant (Solid Waste Management) 2021-2022** | |
| 8. | வார்டு எண்.1 உரக்கிடங்கு பகுதிக்கு ஜெனரேட்டர் செட் அமைத்து 20KVA ஜெனரேட்டர் வாங்கி பொருத்தும் பணி. | 10.00 |
| 9. | வார்டு எண்.1 மேல்கூடலூர் உரக்கிடங்கு உள்ள கோழிக் கழிவுகள் கொட்டும் இடத்திற்கு தடுப்புச் சுவருடன் கூடிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணி. | 10.00 |
| 10. | வார்டு எண்.1 மேல் கூடலூர் உரக்கிடங்கு பகுதியில் வளம் மறு சுழற்சி மையம் அமைக்கும் பணி. | 20.00 |
| 11. | வார்டு எண்.1 மேல் கூடலூர் உரக்கிடங்கிற்கு ஹைட்ராலிக் பேக்கிங் மற்றும் சீவர் மெசின் வாங்கி பொருத்தும் பணி. | 5.00 |
| 12. | வார்டு எண்.1 மேல் கூடலூர் உரக்கிடங்கிற்கு தடுப்புச் சுவருடன் கூடிய கால்வாய் அமைக்கும் பணி. | 9.00 |
| 13. | வார்டு எண்.1 மேல் கூடலூர் உரக்கிடங்கிற்கு கழிவறை அமைக்கும் பணி. | 5.00 |
| | மொத்தம் | 59.00 |
| | **Tied Grant (59.00+59.00) மொத்தம் = 118.00 இலட்சம்** | |
| | **UnTied Grant 2021-2022** | |
| 1. | மங்குழி பாலம் முதல் கிணறு வரை மற்றும் ஹவுசிங் போர்டு முதல் மரப்பாலம் வரை குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்யும் பணி. | 4.50 |
| 2. | கோக்கால் மேல்நிலை தொட்டி அருகில் HDPE Hose விஸ்தரிப்பு செய்யும் பணி. | 10.00 |
| 3. | பெல்மாடிஸ் செக் டேம் அருகில் புதிய HDPE hose அமைக்கும் பணி. | 10.00 |
| 4. | பெல்மாடிஸ் லைன் சப்போக் எஸ்டேட் அருகில் HDPE hose விஸ்தரிப்பு செய்யும் பணி. | 10.00 |
| 5. | இரும்பு பாலம் பில்டர் பெட்டிற்கு மணல் நிரப்பும் பணி. | 10.00 |

விஷயம்

| | | |
|---|---|---|
| 6. | இரும்பு பாலம் சேகரிப்பு கிணற்றிக்கு 40 HP No.2 டர்பைன் மோட்டார் சப்ளை செய்து பொருத்தும் பணி. | 10.00 |
| 7. | இரும்பு பாலம் சேகரிப்பு கிணற்றிக்கு கலெக்ஷன் சேம்பர் மற்றும் பராமரிப்பு பணி. | 8.00 |
| 8. | கிரிமிடோரியத்திற்கு ஜெனரேட்டர் ஷெட் அமைத்து 20KVA ஜேனரேட்டர் வாங்கி பொருத்தும் பணி. | 10.00 |
| 9. | சளிவயல் மையான பகுதிக்கு எரிமேடை அருகில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி. | 5.50 |
| | மொத்தம் | 78.00 |

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்

ஆணையாளர்
கூடலூர் நகராட்சி (நீலகிரி)